## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 6-5 - துவளில்
### (தோழி தாய்மாரை நோக்கிக் கூறும் பாசுரத்தாலே, ஆழ்வார் தாம் எம்பெருமானிடத்து ஈடுபட்டமையைப் பேசுதல்)

3271 * துவளில் மாமணி மாடம் ஓங்கு *
தொலைவில்லி[1] மங்கலம் தொழும்
இவளை * நீர் இனி அன்னைமீர்! * உமக்கு
ஆசை இல்லை விடுமினோ **
தவள ஒண்சங்கு சக்கரம் என்றும் *
தாமரைத் தடங்கண் என்றும் *
குவளை ஒண்மலர்க் கண்கள் நீர் மல்க *
நின்று நின்று குமுறுமே 1

3272 குமுறும் ஓசை விழவொலித் * தொலைவில்லி
மங்கலம் கொண்டு புக்கு *
அமுத மென்மொழியாளை * நீர் உமக்கு
ஆசை இன்றி அகற்றினீர் **
திமிர் கொண்டாலொத்து நிற்கும் * மற்றிவள்
தேவதேவ பிரான் என்றே *
நிமியும் வாயொடு கண்கள் நீர் மல்க *
நெக்கொசிந்து கரையுமே 2

3273 கரைகொள் பைம்பொழில் தண்பணைத் * தொலைவில்லி
மங்கலம் கொண்டு புக்கு *
உரைகொள் இன்மொழியாளை * நீர் உமக்கு
ஆசை இன்றி அகற்றினீர் **
திரைகொள் பௌவத்துச் சேர்ந்ததும் * திசை
ஞாலம் தாவி அளந்ததும் *
நிரைகள் மேய்த்ததுமே பிதற்றி *
நெடுங்கண் நீர் மல்க நிற்குமே 3

3274 நிற்கும் நான்மறை வாணர் வாழ் * தொலைவில்லி
மங்கலம் கண்ட பின் *
அற்கம் ஒன்றும் அறவுறாள் * மலிந்தாள்
கண்டீர் இவள் அன்னைமீர்! **
கற்கும் கல்வி எல்லாம் * கருங்கடல்
வண்ணன் கண்ணபிரான் என்றே *
ஒற்கம் ஒன்றுமிலள் * உகந்துகந்து
உள்மகிழ்ந்து குழையுமே 4

[1] துலைவில்லி

3275 குழையும் வாள்முகத்தேழையைத் * தொலைவில்லி
மங்கலம் கொண்டு புக்கு *
இழைகொள் சோதிச் செந்தாமரைக்கண்
பிரான் * இருந்தமை காட்டினீர் **
மழை பெய்தால் ஒக்கும் கண்ண நீரினொடு *
அன்று தொட்டும்மையாந்து * இவள்
நுழையும் சிந்தையள் அன்னைமீர்! * தொழும்
அத்திசை உற்று நோக்கியே 5

3276 நோக்கும் பக்கம் எல்லாம் * கரும்பொடு
செந்நெலோங்கு செந்தாமரை *
வாய்க்கும் தண்பொருநல் * வடகரை
வண்தொலைவில்லி மங்கலம் **
நோக்குமேல் அத்திசை அல்லால் * மறு
நோக்கிலள் வைகல் நாள்தொறும் *
வாய்க்கொள் வாசகமும் * மணிவண்ணன்
நாமமே இவள் அன்னைமீர்! 6

3277 அன்னைமீர்! அணிமாமயில் * சிறு
மானிவள் நம்மைக் கைவலிந்து *
என்ன வார்த்தையும் கேட்குறாள் *
தொலைவில்லி மங்கலம் என்றல்லால் **
முன்னம் நோற்ற விதி கொலோ? *
முகில்வண்ணன் மாயங்கொலோ? * அவன்
சின்னமும் திருநாமமும் * இவள்
வாயனகள் திருந்தவே 7

3278 திருந்து வேதமும் வேள்வியும் *
திருமாமகளிரும் தாம் * மலிந்
திருந்து வாழ் பொருநல் * வடகரை
வண்தொலைவில்லி மங்கலம் **
கருந்தடங்கண்ணி கை தொழுத *
அந்நாள் தொடங்கி இந்நாள் தொறும் *
இருந்திருந்து அரவிந்தலோசன! *
என்றேன்றே நைந்திரங்குமே 8

3279 இரங்கி நாள்தொறும் வாய்வெரீஇ * இவள்
கண்ணநீர்கள் அலமர *
மரங்களும் இரங்கும் வகை *
மணிவண்ணவோ! என்று கூவுமால் **
துரங்கம் வாய் பிளந்தான் உறை * தொலைவில்லி
மங்கலம் என்று * தன்
கரங்கள் கூப்பித் தொழும் * அவ்வூர்த்

திருநாமம் கற்றதற் பின்னையே 9

3280 பின்னை கொல்? நிலமாமகள் கொல்? *
திருமகள் கொல்? பிறந்திட்டாள் *
என்ன மாயங்கொலோ? * இவள் நெடுமால்
என்றே நின்று கூவுமால் **
முன்னி வந்தவன் நின்றிருந்து உறையும் *
தொலைவில்லி மங்கலம்
சென்னியால் வணங்கும் * அவ்வூர்த்
திருநாமம் * கேட்பது சிந்தையே 10

3281 * சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் *
தேவ பிரானையே *
தந்தை தாய் என்றடைந்த * வண்குருகூரவர்
சடகோபன் **
முந்தை ஆயிரத்துள் இவை * தொலைவில்லி
மங்கலத்தைச் சொன்ன *
செந்தமிழ் பத்தும் வல்லார் * அடிமை
செய்வார் திருமாலுக்கே 11

**அடிவரவு:** துவளில் குமுறு கரை நிற்கும் குழையும் நோக்கும்
அன்னை திருந்து இரங்கி பின்னை சிந்தை மால்